புரட்சிப்
# பெரியார் முழக்கம்
www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • ஆகஸ்ட் 28, 2025 • புரட்சி 25 • முழக்கம் 37 • விலை ரூ.6.00



## பெரியார் எனும் பெருநெருப்பு

# மாநாடு போல் நடந்த கொளத்தூர் கருத்தரங்கு

**கொளத்தூரில் நடந்த ‘பெரியார் எனும் பெருநெருப்பு’ கருத்தரங்கம் மாநாடு போல் எழுச்சியுடன் நடந்தது. அரங்கம் நிரம்பி வழிந்த்து.**

சேலம் மாவட்டம் கொளத்தூரில் ஆகஸ்ட் 17-ல் கே.வி.ஆர் மண்டபத்தில் ஈசுவரன் (தலைமைக் குழு உறுப்பினர்) தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது.

மேட்டூர் டி.கே.ஆர் இசைக்குழு கோவிந்தராஜ் மற்றும் மக்கள் கலை இலக்கியக் கழகம் இணைந்து பகுத்தறிவு பாடல்கள் பாடினார்கள்.

கொளத்தூர் இளைஞரணி தோழர் குமரேசன் வரவேற்புரையாற்றினார், ஆசிரியர் செல்வேந்திரன் நிகழ்வுகளை ஒருங்கிணைத்தார். மிதுன் சக்கரவர்த்தி (திமுக மேற்கு மாவட்ட ஒன்றியச் செயலாளர்) கருத்தரங்கத்தில் ஏராளமான தோழர்களுடன் கலந்து கொண்டு கழகத்தின் ஜாதி எதிர்ப்புப் பரப்புரையின் அவசியத்தை பாராட்டி பேசினார்.





***மில்டன்:*** பேரலை வலையொளி மில்டன் தனது உரையில்; பெரியார் அறிமுகப்படுத்திய சுயமரியாதை திருமணம் வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது என்று குறிப்பிட்டார். ஜாதி கட்டமைப்பையும் பெண் அடிமையையும் சமூகத்தில் அது அசைத்தது. இந்தி, சமஸ்கிருத எதிர்ப்பு என்பது மொழித் திணிப்பு எதிர்ப்பு மட்டுமல்ல! அது பண்பாட்டுத் திணிப்பு எதிர்ப்பு என்றார்.

இந்தியை திணிப்பதின் நோக்கம் சமஸ்கிருத பார்ப்பனிய பண்பாட்டை நிலைப்படுத்திட வேண்டும் என்பதே என்று பெரியார் விளக்கினார் . மொழித் திணிப்பை தமிழ்நாடு ஏற்க மறுப்பது பண்பாட்டு உரிமைப் போராட்டமாகும். திராவிடர் இயக்கத்தின் சுயமரியாதை ஜாதி எதிர்ப்பு கருத்துக்களை திராவிட அரசியல் கட்சிகள் தங்களுக்கான வேலைத்திட்டம் அல்ல என்று ஒதுக்கி விடக்கூடாது என்றார் மில்டன்.



**வழக்கறிஞர் திருமூர்த்தி**: சமூக மாற்றத்துக்கான ஆக்சிஜனைத் தந்த தலைவர் பெரியார் என்பதால் அவர் ஒரு பெரும் நெருப்பு என்றார் திருமூர்த்தி. ஜாதி மறுப்பு திருமணங்களை உருவாக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது; அது மட்டுமல்ல ஜாதி மறுப்பு திருமணம் செய்தவர்களுக்கு பாதுகாப்பு தர வேண்டும், அவர்களின் வாழ்வாதாரங்களையும் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியிருப்பதை சுட்டிக்காட்டினார்.

பீகாரில் 65 லட்சம் வாக்காளர்களை நீக்குவது, பிறப்பு சான்றிதழில்லாதவர்களுக்கு வாக்குரிமை மறுக்கப்படுவதைப் போன்ற அரசியல் நடவடிக்கைகள் பாஜகவின் மற்றுமொரு பாசிச அணுகுமுறையின் வெளிப்பாடாகும். இது இந்தியாவின் அடிப்படைக் குடிமக்களுக்கான உரிமைகளை மறுக்கிறது. ஹிட்லர் எப்படி யூதர்களை சட்டப்படி ஒழிக்க முயற்சித்தரோ அதே போல் மோடி அரசு பார்ப்பனரல்லாத மக்களை இரண்டாம் தர குடிமக்களாக மாற்ற முயற்சித்து வருகிறது என்றார்.



**மைனர்:** "யூடுபூருட்டஸ்" வலையொலி மைனர், பார்ப்பனர் அல்லாத ஒடுக்கப்பட்ட மக்கள் மீது பார்ப்பனியம் திணித்த சமூகக் கொடுமைகளை வரலாற்று ஆதாரங்களுடன் விளக்கினார்.

மானம் என்பது தனிமனித உடல் சார்ந்ததாகவோ, ஒழுக்கம் சார்ந்ததாகவோ சமூகம் பார்க்கிறது. அதைவிட ஒரு சமூகமே கீழானது, இழிவானது என்று நிலை நிறுத்தப்பட்டுள்ள இழிவை சமூகம் பார்க்க மறுக்கிறது. பெரியார் பேசிய சுயமரியாதையும், மானமும் சமூகம் சார்ந்தது மானம் பறிக்கப்பட்டு அதன் வழியாக இழிவுப்படுத்தப்பட்டு அதன் வழியாக சமூக உரிமைகளை பறித்தது. அந்த ஆதிக்க சக்திகளுக்கு எதிராக “மானம் பாராமல்” போராடிய தலைவர் பெரியார் என்ற வரலாற்றுச் சான்றுகளோடு முன் வைத்தார்.



**இந்திரகுமார் தேரடி:** இந்துத்துவ பாசிச எதிர்ப்பு என்ற ஒற்றைப் புள்ளி நம்மை இணைத்து வைத்துள்ளது என்றார் இந்திரகுமார். பெரியார் முன்மொழிந்த திராவிடம் என்ற குறியீட்டுச் சொல் இப்போது விவாதப் பொருளாகி இருக்கிறது. திராவிட எதிர்ப்பு என்ற ஒற்றை வார்த்தைக்குள்ளேயே அரசியலை நகர்த்திக் கொண்டு இருக்கிறார்கள். வேறு வார்த்தை ஏதாவது இருந்தால் சொல்லுங்கள் ஏற்றுக்கொள்கிறேன் என்றார் பெரியார்.

ஆனால் அந்த வார்த்தை பார்ப்பனர்கள் ஊடுருவலை தடுக்கக்கூடிய வார்த்தையாக இருக்க வேண்டும் என்றார். இப்போது அதிகாரத்துடன் பார்ப்பனியம் திணிக்கப்படுகிறது. சுதந்திர நாள் விழாவில் கொடியேற்றி 105 நிமிடங்கள் மோடி பேசினார். இதில் 48 முறை இந்தியா என்ற சொல்லை உச்சரித்திருக்கிறார். அதுவும் நாட்டை குறிப்பதற்காக அல்ல! அவர் பெருமையுடன் அறிவித்துக் கொண்டிருக்கும் திட்டமான ‘மேக்கிங் இந்தியா’ என்ற திட்டத்தை குறிப்பிடுவதற்காகவே பயன்படுத்தினார். ஆனால் ‘பாரதம்’ என்ற சொல்லை 58 முறை உச்சரித்தார். பாட நூல்களில் ‘இந்தியா’ என்பது நீக்கப்பட்டு ‘பாரதம்’ என்பது இப்போது பயன்படுத்தப்படுகிறது. என்ன காரணம்? அவரது குருநாதர் கோல்வாக்கர் “பாரதம்” என்பது மட்டுமே இந்துக்களின் நாட்டைக் குறிக்கும் என்று எழுதி வைத்துள்ளார்.

**ஸ்ரீநிதி:** சமூக ஊடகங்களில் பெரியார் கருத்துகளை பரப்பி வரும் ஸ்ரீநிதியின் ‘லவுட் ஸ்பீக்கர்’ வலைதளம் மிகவும் பிரபலமாகி வருகிறது. கொளத்தூர் நிகழ்ச்சியில் அவர் பங்கேற்று பேசினார். பொது மேடையில் தான் பங்கேற்கும் இரண்டாவது மேடை என்று அவர் குறிப்பிட்டார். அவர் தனது உரையில் குறிப்பிட்டதாவது:

தமிழ்நாட்டில் அரசியல் செய்ய யார் முன் வந்தாலும் பெரியார் கொள்கையை பிடித்து தான் இங்கே நிற்க முடியும்; அதுதான் இங்கே அரசியல் முகவரி. இந்த பெரியார் என்ற ஒத்த தலையை வாங்குவதற்கு பத்து தலைகள் இங்கே வந்து கொண்டிருக்கின்றன என்பதிலிருந்து பெரியார் எவ்வளவு சக்தியாக இருக்கிறார் என்பது புரியும்.

“தம்பி நான் குட்டிக் கதை சொல்லுபவனல்ல கட்டுக்கதை சொல்ல வந்தோம்” என்று கதை எல்லாம் அடித்துவிடுவாங்க, நாம் உண்மையைத் தான் பேச முடியும். சமூக நீதியின் பிறப்பிடமாகவும் அதன் முகவரியுமாக தமிழ்நாடு இருக்கிறது என்பதை 1979-ல் மண்டல் கமிஷன் தன் முகவுரையில் எழுதியுள்ளது.

நம்ம வம்சத்தில் ஒருத்தன் கூட கோழை இல்லை என்று ஜாதிப் பெருமை பேசுகிறார்கள். வரலாறு படிக்கும் போதுதான் தெரிகிறது ஒருவருக்கும் மூளை இல்லை என்பது. தமிழ்த் தேசியத்தை தமிழ்நாட்டில் முதன்முதலில் கையில் எடுத்ததே பெரியார் என்ற வரலாறு தெரியுமா? பெரியாரை தெலுங்கர் என்று சொல்லும் வசை சொற்களை பெரியார் தன் வாழ்நாளிலே கேட்டுவிட்டார். வட நாட்டில் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்து மத ஆட்சியை தருவோம் என்று சொல்லித் தான் வாக்கு கேட்க வேண்டிய சூழல் அங்கு நிலவுகிறது. ஆனால் தமிழ்நாட்டில் அப்படி சொன்னால் ஒரு ஓட்டு கூட விழாது. மாறாக தமிழ்நாட்டில் சமூக நீதி திட்டங்களை சொன்னால் தான் இங்கு ஆட்சிக்கு வர முடியும் இது தான் திராவிடர் இயக்க சாதனை என்று தனது பாணியில் பேசினார்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசுகையில்: ஜாதி ஒழிப்பு என்ற லட்சியத்திற்கு தடையாக நிற்கும் பார்ப்பனியம், இந்திய தேசியம், ஆணாதிக்கம், மூட நம்பிக்கைகளை எதிர்த்து போராடியது பெரியார் இயக்கம் என்றார். பொதுவுடமை கட்சியின் தொழிற்சங்கத் தலைவராக இருந்த ஏ.எஸ். ஐயங்கார் தனது ஜாதி அடையாளத்தை அரசு பதிவேடுகளின் (கெசட்) வழியாகவே நீக்கிக் கொண்டார். ஜாதி விலக்கத்தின் அடையாளமாக தமிழ்நாடு இருக்கிறது. ஜாதிய உணர்வுகள் இருந்தாலும் பெயர்களோடு சேர்த்து அடையாளப்படுத்துவதை அவமானம் என்ற உளவியல் தமிழ்நாட்டில் மட்டுமே உருவாகி இருக்கிறது என்பது பெரியார் இயக்கத்தின் சாதனை என்றார்.

கருத்தரங்கிற்கு மேடை வடிவமைப்பு பணிகளைச் செய்த சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் த.நா சூர்யா, யாழினி, குமார், எழிலரசன், ப.அருண் ஆகியோரை பாராட்டி கழகத் தலைவர் பயனாடை அணிவித்தார்.

நாத்திகர் விழாவில் பார்வையாளராக வந்த தோழர் மாய கண்ணன் விழாவில் வாய்வழி நெருப்பு வித்தை காட்டினார். அவருக்கு கழகத் தலைவர் பயனாடை அணிவித்தார்.

கருத்தரங்கத்தில் சேலம், மேட்டூர், நங்கவள்ளி கழக பொறுப்பாளர்கள், மகளிர் அணி பொறுப்பாளர்கள், இளைஞரணி தோழர்கள், மாணவர் கழகத் தோழர்கள் பலர் கலந்து கொண்டனர். படங்கள் எடுக்கும் பணியை கழகத் தோழர்கள் விஜி, இளவரசன் (கபிலன் ஸ்டுடியோ) செய்தனர்.

திருப்பூர், ஈரோடு, நாமக்கல், கோவை, சென்னை, மாவட்டப் பொறுப்பாளர்கள் மற்றும் தோழர்கள் 400க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். சுகந்தன் (தமிழ்நாடு மாணவர் கழகம்) நன்றி தெரிவித்தார்.



**நிகழ்வில் கே.வி கந்தசாமி (சமூக ஆர்வலர்) கழகத் தலைவரின் தொடர் பணிகளை பாராட்டி தலைவருக்கு பிறந்தநாள் பரிசாக ரூ.50000 வழங்கினார்.**



**சேலம் மாவட்டக் கழகம் சார்பாக கோவிந்தராஜ் ( மாவட்டச் செயலாளர்) ரூ.41,600-அய் பெரியார் முழக்க வளர்ச்சி நிதியாக வழங்கினார்.**

## தலையங்கம்

# இது ‘ஜனநாயக திருட்டு’

புதிய சட்டத் திருத்தம் ஒன்றை அமித் ஷா நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தி இருக்கிறார். 5 ஆண்டுகள் தண்டனை வழங்கக்கூடிய குற்றத்தின் கீழ் பிரதமர், முதல்வர்கள், அமைச்சர்கள் கைது செய்யப்பட்டு 30 நாட்கள் சிறையில் இருந்தாலே, அவர்கள் பதவி பறிக்கப்படும் என்று கூறுகிறது இந்த மசோதா. நீதிமன்ற விசாரணை, நீதிமன்ற தீர்ப்புகள் இல்லாமலே குற்றவாளிகளை ஒன்றிய பாஜக ஆட்சியே தனது புலனாய்வு, அமலாக்கத்துறை அமைப்புகளை வைத்து முடிவு செய்து விட முடியும். “ஓட்டு திருட்டு செய்தவர்கள் அடுத்து ஜனநாயக திருட்டுக்கு தயாராகிறார்கள்” என்று காங்கிரஸ் கட்சி தலைவர் கார்கே மிகச்சரியாகவே சுட்டிக்காட்டி உள்ளார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் எதிர்க்கட்சி ஆட்சிகளை குறுக்கு வழியில் வீழ்த்துவது இந்த சட்டத்தின் நோக்கம். மாநில ஆட்சியை கவிழ்ப்பதற்கு ஏற்கனவே 356 என்ற ஒரு சட்டப்பிரிவு இருந்தது. உச்ச நீதிமன்ற தீர்ப்பால் இந்த பிரிவு செயலற்றதாக்கப்பட்டு விட்ட நிலையில், இப்போது ஒரு புதிய குறுக்கு வழியை கண்டுபிடித்து இருக்கிறது ஒன்றிய ஆட்சி. அரசியலில் குற்றங்கள், ஊழலை ஒழிப்பதற்காகவே இந்த சட்டம் கொண்டுவரப்பட்டதாக அமித் ஷா கூறுகிறார். அமித் ஷாவே போலி என்கவுண்டர் வழக்கில் கைதாகி குஜராத் மாநிலத்திற்குள் நுழையக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டவர் தான்.

இந்தியாவில் இந்து இராஷ்டிரம் அமைவதற்கு மாநிலங்கள் என்ற அமைப்பு தடையாக இருக்கிறது. மாநில உரிமைகளைப் பறிப்பது; இந்தி, சமஸ்கிருத அடையாளங்களை திணிப்பது; பாடநூல்கள் வழியாக வரலாறுகளை திரிப்பது; இதற்கு ஏற்ற கல்வித் திட்டங்களை உருவாக்குவது; மதவாத அரசியலை எதிர்க்கும் கட்சிகளை முடக்குவது; அனைத்து மாநில அதிகாரங்களையும் பாஜகவின் கட்டுப்பாட்டுக்கு கீழ் கொண்டு வருவது; பாஜக ஆட்சி செய்யாத மாநிலங்களில் தங்களின் தூதர்களாக ஆளுநர்களை நியமித்து மாநில சட்டங்களை முடக்குவது; தேர்தல் ஆணையத்தின் நேர்மையை குலைப்பது; உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியை தேர்தல் ஆணைய நியமன குழுவில் இருந்து விலக்கி திருத்தம் செய்வது; தேர்தலில் முறைகேடுகள் செய்வது; என்று அடுக்கடுக்கான சீர் குலைவுகளை ஒன்றிய ஆட்சி அரங்கேற்றி வருகிறது.

அமலாக்கத்துறை எதிர்க்கட்சிகளை மட்டுமே குறிவைக்கின்றன. ஆளும் கட்சியின் பக்கம் அவை திரும்புவதே இல்லை. அரசியல் கட்சிகளை மிரட்டி பணிய வைப்பதற்கு இந்த துறைகள் ஏவப்படுகின்றன. அமலாக்கத்துறை அதிகாரிகளே இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகிறார்கள். அப்படி கையும் களவுமாக பிடிபட்ட ஒரு அதிகாரி மீது தமிழ்நாடு அரசு வழக்கு தொடர்ந்து சிறையில் அடைத்தது. அந்த அதிகாரியை காப்பாற்றவும் அவரை பிணையில் எடுக்கவும், இந்த ஊழல் ஒழிப்பு ‘உத்தமர் ஆட்சி’ தான் தீவிரமாக செயல்பட்டது.

தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களின் 31 விழுக்காடு பேர் மீதும் சட்டமன்ற உறுப்பினர்களின் 29 விழுக்காடு பேர் மீதும் கிரிமினல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஐந்து ஆண்டுகள் தண்டிக்கப்படக் கூடிய கடுமையான கிரிமினல் வழக்குகளை சந்திக்கும் வேட்பாளர்களை பாஜக தேர்தலில் பெருமளவில் நிறுத்தி இருக்கிறது. உபியில் 34 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடுமையான கிரிமினல் வழக்குகளில் இருக்கின்றனர்.

சதவீத கணக்கில் பார்த்தால் தெலுங்கானா முதல் இடத்திலும் (71 விழுக்காடு), பீகார் இரண்டாவது இடத்திலும் (48 விழுக்காடு) இருக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர்களில் கிரிமினல் வழக்குகளில் அதிகமாக இருப்பவர்கள் பாஜக உறுப்பினர்கள் தான். 32 பேர் மீது கிரிமினல் வழக்கு பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. 1200 சட்டமன்ற உறுப்பினர்கள் மீது கிரிமினல் வழக்குகள் உள்ளன. (ஆதாரம் ஆகஸ்ட் 26 ‘இந்து’ ஆங்கில நாளேடு).

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் மீதான தண்டனை உறுதி செய்யப்பட்ட பிறகு அவர்களின் பதவி பறிப்புக்கு தேர்தல் ஆணையத்திற்கு சட்டபூர்வ உரிமை உண்டு. இந்த மசோதா இந்த உரிமைகளை பறித்து விடுகிறது.

இப்படி ஒரு சட்டத்தை இப்போது அவசர அவசரமாக கொண்டு வருவதற்கான தேவை என்ன? அதுவும் நாடாளுமன்ற கூட்டத்தொடரின் கடைசி நாளில் விவாதங்களுக்கு வாய்ப்பு இன்றி ஏன் தாக்கல் செய்ய வேண்டும்? இதற்குப் பின்னால் மிகப்பெரும் அரசியல் சதி இருக்கிறது. இந்தியாவை ஒற்றை தேசமாக்கி இந்து இராஷ்டிரம் நோக்கி நகர்த்துவதற்கு சட்டங்கள் ஏற்கனவே ஆர்.எஸ்.எஸ் கட்டுப்பாட்டில் உள்ள அதிகார மய்யத்தால் பட்டியலிடப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றாக தாக்கல் செய்யப்படுகின்றன். நாடாளுமன்ற கூட்டுக்குழுவுக்கு இந்த மசோதா அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் கூட்டுக் குழுவில் எதிர்க்கட்சியின் கருத்துக்களை இந்த ஆட்சி செயல்படுத்தப் போவது இல்லை என்பதை ‘வக்பு வாரிய சட்டத்’ திருத்தத்தில் நாடு இதை பார்த்தது.

1933 ஜெர்மனியில் ஹிட்லர் நாஜி கட்சியின் தலைவராக ஜனநாயக முறையில் தேர்வு செய்யப்பட்டு, பிறகு அவசர சட்டங்களை பிறப்பித்து முழு சர்வாதிகாரியாக மாறினார். 1922 இல் இத்தாலியின் முசோலினி சட்டப்படி பிரதமராகி, பிறகு ஜனநாயக அமைப்புகளை ஒழித்து பாசிச சர்வாதிகாரியாக மாறினார். அண்மைக்கால உதாரணம் துருக்கியின் எர்டோசன் 2003-இல் பிரதமர் ஆகி 2017 -இல் அவசர சட்டங்களால் ஜனநாயகத்தை ஒழித்து சர்வாதிகாரியாகிவிட்டார். அதே சர்வாதிகார பாதையை நோக்கியே ஒன்றிய மதவெறி ஆட்சி நகருகிறது. மதசார்பற்ற சமூகநீதி மனித உரிமை அமைப்புகளும், கட்சிகளும் மக்களிடையே இந்த ஆபத்துக்களை விளக்கி முறியடிக்க முன்வர வேண்டும்.

## பெரியாரின் பேத்திக்கு பெரியார் விருது



"பெண் விடுதலைப் போராளி கனிமொழி அவர்களுக்கு திமுக சார்பில் பெரியார் விருது வழங்கப்பட்டு இருப்பது மிகச் சிறப்பானது. பொருத்தமானது.இந்த விருதுக்கு நூற்றுக்கு நூறு தகுதி அவருக்கு உண்டு.இளமைக் காலத்தில் இருந்தே அவர் ஒரு பெரியாரிஸ்ட்.

"எங்கள் குடும்பத்தில் கனிமொழி ஒரு முழுமையான பெரியாரிஸ்ட்" என்று கலைஞர் பெருமையுடன் கூறினார். பெரியாரை உள்வாங்கியதால் அவரது அரசியல் பயணம் ஆரவாரம் இன்றி சீராக நதி போல் ஓடிக்கொண்டிருக்கிறது.வீண் சர்ச்சைகளுக்கு அவர் இடமளிப்பதில்லை கடுஞ்சொல் பேசாதவர்.எளிமையானவர். அதே நேரத்தில் பெண்களை அவமதிக்கும் கருத்துக்கள் தலைவர்களிடமிருந்து வரும்போது முதல் எதிர்ப்புக் குரல் அவரிடம் இருந்து தான் வரும்.தனது சொந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் சமரசம் செய்து கொள்ள மாட்டார். நாடாளுமன்றத்தில் அவரது பேச்சுகள் அதிர வைக்கின்றன.

மிகச் சிறந்த கவிஞர். அரசியல் வருகைக்கு பிறகு "கவிஞர் கனிமொழியை" காண முடியவில்லை என்பது வருத்தம்தான்.

பெரியார் பெண்ணுரிமை கருத்தியலைக் கடந்து பெண் விடுதலையைப் பேசியவர். பெரியாரின் பெண்ணுரிமை நோக்கி இன்று பெண்கள் ஏராளமாக வந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் பெரியாரின் பெண் விடுதலை கருத்தியலை ஏற்றுக்கொள்ளும் அபூர்வமான அரசியல் பெண் தலைவர் கனிமொழிதான் என்று உறுதியாக கூற முடியும்.

பெரியாரின் பேத்திக்கு பெரியார் விருது கிடைத்திருப்பது பெரியார் இயக்கங்களுக்கு கிடைத்த பெருமையாகவே கருதி மகிழ்கிறோம். வாழ்த்துகிறோம்."

**- "விடுதலை இராசேந்திரன்," முகநூல் பதிவு, 24.08.25.**

## கழக ஏட்டுக்கு நன்கொடை

ஆசிரியர்கள் சிவகாமி, சிவக்குமார் முன்னெடுப்பில் பெரியார் முழக்க வளர்ச்சிக்கு வாட்ஸ் ஆப் வழியாகத் தோழர்களை திரட்டி மாதம் ரூ.500 என்று நன்கொடையை கழக ஏட்டுக்கு திரட்டி வருகின்றனர். கடந்த இரண்டு மாதங்களாக பெரியார் முழக்க வங்கி கணக்குக்கு அனுப்பி வருகின்றனர். நாளுக்கு நாள் குழுவில் தோழர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து, மாதம் மாதம் நன்கொடையும் அதிகரித்து வருகிறது.

**ஜூலை மாத நன்கொடையாக ரூ.23000 அனுப்பி உள்ளனர்.** மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆசிரியர்).

## குமரி மாவட்டத்தில் கழக கலந்துரையாடல் கூட்டம்

24.08.2025 அன்று மாலை 04.00 மணியளவில் தக்கலை அரசு ஊழியர் சங்க அலுவலக கட்டிடத்தில் குமரி மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம், கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் தலைமையில் நடைபெற்றது. நீண்ட இடைவெளிக்கு பின்பு மீண்டும் தி.வி.க.வின் களப்பணியினை தொடங்க வேண்டும் என்ற குமரி மாவட்ட தோழர்களின் வேண்டுகோளுக்கு இணங்க நடைபெற்ற கூட்டத்தில் புதிய பொறுப்பாளர்கள் மற்றும் இயக்கம் செயல்படுவது குறித்தும் விவாதிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் கீழ்கண்ட தோழர்கள் மாவட்டத் தலைவர் - ஜா. சூசையப்பா

மாவட்டச் செயலாளர் - நீதியரசர், மாவட்ட பொருளாளர் - ரமேஷ்பாபு, செய்தித் தொடர்பாளர் - தமிழ்மதி ஆகியோர் பொறுப்பாளர்களாக தேர்வு செய்யப்பட்டனர்.

தோழர்கள் இயக்கத்தில் தொய்வின்றி பணியாற்ற வேண்டும் என்றும் மாத சந்தாவாக ரூ - 100/- வசூலிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

முன்னாள் மாவட்டச் செயலாளர் தமிழ்மதியிடம் கையிருப்பு தொகை ரூ. 4,660 இருப்பதை முறையான வரவு செலவு கணக்கினை கூட்டத்தில் சமர்பித்தார். புதிய பொறுப்பாளர்களிடம் ரூபாய் 5000/-த்தை ஒப்படைத்தார்.

கலந்துரையாடல் கூட்டத்தில் அடுத்த கட்ட செயல்பாடு குறித்தும், புதிய மற்றும் பழைய தோழர்களை சந்தித்து கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்து கொள்ள செய்வது என முடிவு எடுக்கப்பட்டது. நிகழ்வில் பள்ளியாடி இளங்கோ, மஞ்சுகுமார், ஜெபகுமார், ரித்தீஸ், கரீம், அகமது, குறும்பை (தென்காசி மாவட்டத் தலைவர்), அரு. மாசிலாமணி (நெல்லை மாவட்டத் தலைவர்), அணைக்கரை பா.பால்வண்ணன் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

## "Magzter" தளத்தில் பெரியார் முழக்கம்

வார இதழாக ஏறத்தாழ 25 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழ், கழக இணையதளப் பக்கத்திலும் கீற்று இணையதளப் பக்கத்திலும் பதிவேற்றி வரப்பட்டது. சென்னை பெருங்களத்தூரை சேர்ந்த கழகத் தோழரும் ஐ.டி. ஊழியருமான நந்தகுமார் முயற்சியில், வருகிற செப்டம்பர் மாதம் முதல் ‘Magzter’ (www.Magzter.com) என்ற இணையதளப் பக்கத்திலும் இனி புரட்சிப் பெரியார் முழக்கம் இதழ் இ–பேப்பர் வடிவில் வெளிவரும். பத்திரிகைகளுக்கு என்று வடிவமைக்கப்பட்ட இந்த இணையதளப் பக்கத்தின் சந்தாதாரர்கள், இனி வாரம்தோறும் புரட்சிப் பெரியார் முழக்கத்தை இலவசமாக வாசிக்கலாம்.


# கடவுளை மறுத்த ஆன்மீகவாதி

## கொளத்தூர் நாத்திக விழா சிந்தனை-12

-விடுதலை இராஜேந்திரன்

'மனம்' என்று ஒன்று இல்லை அது மூளை என்ற ஒரு பொருளின் செயல்பாடு. மனதை ஒருமுகப்படுத்துவது ஆன்மிகம் சார்ந்தது அல்ல! அது ஒரு பயிற்சியே என்ற கட்டுரையை கடந்த இதழில் 'பெரியார் முழக்கம்' வெளியிட்டது. கடவுள் வழி நடத்தவில்லை, மனித மூளை தான் உடலை இயக்குகிறது என்பதே அந்த கட்டுரையின் மய்யமான கருத்து.

இதற்கு நேர் மாறாக 'மனமே' மனிதரை இயக்குகிறது. தனி மனிதரின் 'மன மாற்றமே' அனைத்துக்கும் தீர்வு. மனிதருக்கு வெளியே புறத்தில் நிகழும் சமூகப் புரட்சிகள் உயிரற்றவை, நானே என்னை புரிந்து கொள்ளாத வரை வாழ்வின் அர்த்தத்தை புரிந்து கொள்ளாமல், மற்றவர்களை எப்படி புரிந்து கொள்ள முடியும் என்ற சிந்தனையை உலகம் முழுதும் ஒருவர் பரப்பினார். உலகப் புகழ்பெற்ற தத்துவஞானியாக அவர் பேசப்பட்டார், அவரது பெயர் 'ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி'.



பொருளியல் நிகழ்வுகளை விலக்கிவிட்டு 'மனப்புரட்சி' பேசிய அவரது பின்னணியை சுருக்கமாக விளக்குவோம்.

1875-இல் மதனப்பள்ளியில் பார்ப்பனக் குடும்பத்தில் அவர் பிறந்தார். 1986 பிப்ரவரி 17-ல் அமெரிக்காவில் கலிபோர்னியாவில் மரணம் அடைந்தார். பாரீசில் சேர்வான் பல்கலைக்கழகத்தில் அவர் படித்தார். உலகின் மிகச்சிறந்த சிந்தனையாளராக வலம் வந்து உலகம் முழுதும் பரப்புரை செய்தார். தனக்காக ஒரு தனியான தத்துவத்தை அவர் உருவாக்கிக் கொள்ளவில்லை. அவரது கருத்தை கேட்ட மக்கள் அவரை "மனித கடவுள்" என்றார்கள்; புத்தரின் அவதாரம் என்றார்கள், ஆனால் இந்த புனைவுகளை அவர் ஏற்க மறுத்துவிட்டார். தான் ஒரு சாதாரன மனிதன் என்று அறிவித்துக் கொண்டார்.

அவரது தந்தை நாராயணய்யா 1881 முதல் சென்னை அடையாறில் உள்ள தியாசபிக்கள் சொசைட்டியில் உறுப்பினரானார். தன்னுடன் தனது இரண்டு மகன்களையும் அவர் உடன் அழைத்து வந்து நிறுவனத்தின் வளாகத்தில் மூத்த மகன் கிருஷ்ண மூர்த்தியுடன் வாழத் தொடங்கினார். தியாசபிக்கள் சொசைட்டி என்ற வேதாந்த நிறுவனத்தின் தலைவர் அன்னிபெசன்ட். இவர் 1847-இல் லண்டனில் அயர்லாந்தில் பிறந்து பிராங்க் பெண்ட் என்ற கிறிஸ்தவ மதகுருவை திருமணம் செய்து கொண்டார்.

மதங்களை கடவுளை மறுத்து "சார்லஸ் பிராட்லாவின்" நாத்திகர் அமைப்பில் இணைந்தார். மதக் கொள்கைகளில் தனது கணவருடன் முரண்பட்டு அவரிடமிருந்து பிரிந்தார். தொழிலாளர் உரிமை, பெண்கள் உரிமைக்காகப் போராடினார். 1893-ல் இந்தியா வந்த அன்னிபெசன்ட் தனது பகுத்தறிவு சீர்திருத்த கருத்துகளை முற்றாக கைவிட்டு, கர்மா, மறுபிறவி போன்ற பிற்போக்கு கொள்கையில் பழமைவாதத்தை நோக்கி பயணமானார். இந்திய தேசிய காங்கிரஸின் முன்னணி தலைவரானார்.

அவரது பார்ப்பனிய கருத்துக்களை ஏற்று ஸ்மார்த்த பார்ப்பனர்கள் அவரை தீவிரமாக ஆதரித்தார்கள். "ஹோம் ரூல்" என்ற இயக்கத்தை தொடங்கினார். "நியூ இந்தியா" என்ற பத்திரிகையும் அவர் நடத்தினார். நீதிக்கட்சி தோன்றுவதற்கு தூண்டுகோலாக இருந்தது அன்னிபெசன்ட் துவக்கிய "ஹோம் ரூல்" இயக்கம் தான் என்கிறார் ஆய்வாளர் இர்ஷ்விக்.

பிறரது மனதில் இருப்பதை தன்னால் அறிந்து கொள்ள முடியும் என்ற மாயாஜாலத்திலும் அவர் ஈடுபட்டார். இந்து மதத்தின் பெருமைகளையும் இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் செய்து பரப்பினார். அந்த அன்னிபெசன்ட் வேதாந்த சபையில் வாழ்ந்த ஜெ. கிருஷ்ணமூர்த்தியிடம் தெய்வீக சக்தி இருக்கிறது என்று நம்பி அவரை தனது மகனாக தத்து எடுத்தார். அவரது தம்பியையும் சேர்த்து தத்து எடுத்தார்.

நாராயணய்யா தனது இரண்டு மகன்களையும் அன்னிபெசன்ட் தத்து எடுத்ததை விரும்பவில்லை; மகன்களை திருப்பி தரக் கோரி நீதிமன்றத்தை நாடினார். செய்தி அறிந்து இருவரையும் இங்கிலாந்துக்கு ரகசியமாக அழைத்து சென்றார் அன்னிபெசண்ட். வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகிறது. நீதிமன்றத்தில் வாதாடியவர் புகழ்பெற்ற பார்ப்பனர் தலைவரான சர்.சி.பி ராமசாமி அயர். வழக்கு லண்டன் பிரிவி கவுன்சில் வரை சென்றது. வழக்கு முடியும் தருவாயில் ஜெ.கிருஷ்ணமூர்த்தி பெரியவர் ஆகிவிட்டார். அன்னிபெசண்ட் அவரை புத்தரின் மறு அவதாரம் என்று கூறியதை ஜெ. கிருஷ்ணமூர்த்தி ஏற்க மறுத்து விட்டார்.

அவர் பேசிய ஆன்மீகம் பொருளியல் சிந்தனையை மறுத்தாலும் கடவுள் மதத்தையும் மறுத்தது; மெட்டிரியலிசத்தை ஏற்க மறுத்து ஆன்மீகம் பேசியவர்கள் கூட கடவுள் இல்லை; மதம் இல்லை, என்ற கருத்தை முன் வைத்தார்கள் என்பது தான் இதில் குறிப்பிடப்பட வேண்டிய செய்தியாகும். கடவுள் மதம் குறித்து அவர் கூறிய கருத்துக்கள்:

கடவுள் என்ற கருத்து உண்மையில் மனிதன் உருவாக்கியதா? அல்லது இயல்பானதா? என்பதை ஆராய்கிறார். கடவுள் என்றால் முழுமையான அறிவும், சக்தியும், அன்பும் கொண்டவர் என்று நம்புகிறார்கள் ஆனால் மனித வாழ்க்கையின் துன்பங்கள், கஷ்டங்கள் மற்றும் அவமானங்கள் கடவுள் இருப்பதை சந்தேகிக்க வைக்கின்றன. கடவுள் என்ற கருத்து மனிதன் உருவாக்கிய கற்பனைதான். இந்தியாவில் பல ஆயிரம் கடவுள்கள் உள்ளன என்பதும் இதற்கு உதாரணம். மனிதன் தன் பயத்தால், பாதுகாப்புக்காக இந்த கடவுள்களை உருவாக்கி, தன் உருவகத்தையே வழிபடுகின்றான். கடவுளுக்கு பணம், பூஜைகள் போன்றவை தேவையில்லை என்றார். உண்மையான கடவுள் அன்பே என்றும், அன்பே கடவுள் என்றும் அவர் வலியுறுத்துகிறார்.

கடவுள் இருப்பதை நம்புவதை விட, உண்மையை ஆராய்ந்து, தனது மனதையும் மனச்சோர்வையும் முற்றிலும் விடுவிக்கவேண்டும் என்று கூறுகிறார். "ஆத்மா" அல்லது "ஆன்மா" என்ற கருத்தையும் விவாதிக்கிறார். அது ஒரு நம்பிக்கையே என்றார். நம்பிக்கையை விட உண்மையைத் தேட வேண்டும். முந்தைய ஆன்மிக ஆச்சார்யர்களின் வாழ்க்கை நமக்கு உதவுமா? என்று கேட்கும்போது, அவர்களது வாழ்க்கை நமக்கானது அல்ல, நம் வாழ்க்கையே நமக்கானது என்று கூறுகிறார். அவர்களது அனுபவங்களை நம்புவதற்கு பதிலாக, தனக்கே நேர்மையாக உண்மையை தேட வேண்டும்.

உண்மையான விடை வார்த்தைகளில் இல்லை; அது அனுபவத்தில் உள்ளது. ஆனால் மனிதன் வார்த்தைகளால் திருப்தி அடைகிறான். உண்மையை அனுபவிக்க மனதும், இதயமும், அடையாளங்களிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். வாழ்க்கையில் தன்னைத் தானே நேர்த்தியாக நடத்திக்கொள்ள வேண்டும்; பிறரை நம்பி, வழிகாட்டிகளைப் பின்பற்றுவதால் பலவீனமாகிறோம். அந்த உண்மையை மனதுக்குள் உணர்ந்தால் தான் மனிதன் சுதந்திரமாகி இயங்க முடியும் என்பது அவரது கருத்து.

**அவரது கருத்துக்களை இவ்வாறு தொகுக்கலாம்:**

- மனிதன் தன் பயத்திற்காக மற்றும் பாதுகாப்புக்காக கடவுளை உருவாக்கினான்; இது மனித மனத்தின் அச்சங்களை, நம்பிக்கைகளை வெளிப்படுத்துகிறது.

- மனிதர்கள் கடவுளுக்கு பணம், பூஜைகள் போன்ற பொருட்களை வழங்குவதை வழக்கமாக செய்கிறார்கள். ஆனால் உண்மையில், கடவுளுக்கு அது தேவையில்லை. இது மத வழிபாட்டின் சில பகுதிகள் மனிதன் உருவாக்கிய அடையாளங்கள். உண்மையான அன்பே 'கடவுள்' என்பதன் உணர்வு இதன் மூலம் வெளிப்படுகிறது.

- வாழ்க்கையில் உண்மையை வார்த்தைகளால் விளக்க முடியாது. "கடவுள்", "ஆத்மா" போன்ற வார்த்தைகள் உண்மையை பிரதிபலிக்க முடியாது. உண்மை என்பது நேரடியாக அனுபவிக்கப்படும் ஒன்று. 'ஆன்மா' ஒன்று இல்லை.

- 'ஆத்மா' அல்லது 'ஆன்மா' பற்றிய நம்பிக்கை பலருக்கு இருக்கிறது. ஆனால் அதில் உண்மையான அடையாளங்களை நாம் வாழ்க்கையில் காணவில்லை; நம்பிக்கை மட்டும் பயனில்லை; அதனை வாழ்வில் உணர்வது முக்கியம். இதன் மூலம்தான் நம் வாழ்க்கையின் சிக்கல்களையும், உளச்சோர்வையும் தாண்டிச் செல்ல முடியும்.

- உண்மையை மனதில் உணர வேண்டும்: உண்மையை அறிவது, மனதில் அதன் தாக்கத்தை உணர்வது மட்டுமே மனிதனை சுதந்திரமாக்கும். இது மனதின் முழுமையான விடுதலை மற்றும் வலிமையை தரும். இதனால் வாழ்க்கை முழுமையானதாகவும் மகிழ்ச்சியானதாகவும் மாறும்.

- ஆன்மிக ஆசார்யர்களின் வாழ்க்கை நமக்கு உதவாது ரமண மகரிஷி, ராமகிருஷ்ணர் போன்ற ஆன்மிக ஆச்சார்யர்களின் வாழ்க்கை நமக்கு வழிகாட்டாது. நாமே நம் வாழ்க்கையை வாழ வேண்டும். மற்றவர்களின் அடையாளங்களை நம்புவது நமக்கு வலிமை தராது என்று அவர் கூறுகிறார்.

### கோயில்களும்- கடவுள்களும் அர்த்தமற்றவை

ஆன்மீக யாத்திரை என்றும், அகவுலகப் பயணம் என்றும், தியானம் என்றும்,யோகம் என்றும், எமக்குள் ஒளிந்திருக்கும் ஆன்மத்தின் சூட்சுமத்தை அறிந்து கொள்வதென்றும், நாம் உலகத்தைத் துறந்து வாழ்க்கையைத் துறந்து, உறவுகளை அறுத்து, காலம் காலமாக நடத்திய தேடுதலால் உண்மையைக் கண்டு கொள்ள முடியாது. கடவுள் என்றும், உண்மைப் பொருள் என்றும் நாம் தேடி அலைந்ததெல்லாம் எமது ஆசையின் நிகழ்வுகளன்றி வேறொன்றுமல்ல.

ஆயிரமாயிரம் கோவில்களைக் கட்டி, அந்தக் கடவுகளைக் குடியமர்த்தினோம். அர்த்தமிழந்த, அபத்தமான எமது வாழ்க்கைக்கு ஒரு பிரமாதமான அர்த்தமாக, ஒரு அலாதி யான நம்பிக்கையாக கடவுள் என்ற கருத்துருவத்தை நாம் தழுவிக் கொண்டோம். எமது மனமோ கனவுலகில், கற்பனையுலகில், நிதர்சனத்திற்குப் புறம்பான உலகில் தூங்குகிறது. இந்தப் புராதன மனதால், காலம் காலமாகப் பொய்களால் புனையப்பட்ட மனதால், மூட நம்பிக்கைகளில் மூழ்கிப் போன மனதால், கருத்துலக் கோட்பாடுகளில் கண்டுண்ட மனதால் உண்மையைக் கண்டுகொள்ள முடியாது. நாம் ஒரு குருவை வரித்துக் கொண்டோ,ஒரு ஆன்மீக வழிகாட்டியை பின் தொடர்ந்தோ, ஆச்சிரமத்தில் தவமிருந்தோ, மந்திரங்கள் ஓதி, பிரார்த்தனைகள் செய்து, அழுது புரண்டு ஆண்டவனை வேண்டியோ உண்மைப் பொருளை கண்டு கொள்ளவே முடியாது.

**-ஜெ.கிருஷ்ணமூர்த்தி உரையிலிருந்து.**

**குறிப்பு: அவரது உரை வலையொலிகளில் இடம்பெற்றுள்ளது.**

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# ஊர்–சேரி பாகுபாட்டை ஒழித்த ‘ஆனைமலை’

**வரலாற்றுப் பதிவுகள் இல்லாத எத்தனையோ போராட்டங்களை பெரியார் இயக்கம் நடத்தி இருக்கிறது உள்ளூர் மட்டத்தில் நடந்த அந்த சமூகப் புரட்சிகளை வெளிச்சப்படுத்தும் கட்டுரைத் தொடரை ‘முரசொலியில்’ ர.பிரகாசு எழுதி வருகிறார். ‘நரசிம்மன் நகர்’ வரலாறு இது.**

1938–ஆம் ஆண்டில் முதல் இந்தி எதிர்ப்புப் போரில்’ பங்கேற்று தந்தை பெரியார் 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்று பெல்லாரி சிறையில் அடைக்கப்பட்ட போது, அவருடன் சிறையில் இருந்தவர்களில் ஒருவர் ‘ஆனைமலை’ நரசிம்மன். பட்டம் படித்தவர் என்பதால், சிறையில் முதல் வகுப்பை அதிகாரிகள் வழங்க, தன் தோழர்கள் எல்லோரும் சாதாரண வகுப்பில் இருக்க, தனக்கு மட்டும் முதல் வகுப்பு வேண்டாம் என்று மறுத்துவிட்டார் நரசிம்மன்.

ஆனால், ஆனைமலையில் வசதி படைத்த, செல்வாக்கான குடும்பம் இவருடையது. ராஜாஜி, சத்தியமூர்த்தி அய்யர் என அந்த காலத்தில் இவர் வீட்டில் பல தலைவர்கள் தங்கிச் சென்றுள்ளனர். 1906–ஆம் ஆண்டு நாராயண நாயக்கர்–குஞ்சம்மாள் தம்பதிக்கு கடைசி மகனாகப் பிறந்தவர் நரசிம்மன். சென்னை அடையாற்றில் பள்ளிப்படிப்பும், அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பும் முடித்தவர். அண்ணன் சங்கர நாராயணன் சந்நியாசி ஆகிவிட்டதால், அச்சத்தில் நரசிம்மனுக்கு அவசர அவசரமாக திருமணம் முடித்து, ஆனைமலையிலேயே தங்கவைத்துவிட்டனர். அது, சுதந்திரப் போராட்டக் காலம் என்பதால், காந்தியடிகளை பின்பற்றி தேச விடுதலைப் பணிகளில் ஈடுபட்ட அவருக்கு, பின்னாளில் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் மீது பற்று திரும்பியது. திருமணம் செய்தால் ஆனைமலையிலேயே இருந்துவிடுவார் என்ற பெற்றோரின் கணிப்பைப் பொய்யாக்கி, தந்தை பெரியாருடன் சேர்ந்து தமிழ்நாடெங்கும், பிற மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் பயணப்பட்டார்.

1946–இல் மதுரையில் ‘கருஞ்சட்டைப்படை’ மாநாட்டுப் பந்தலுக்கு எதிரிகள் சிலர் தீ வைத்தபோது, தலைவர்களையும் தொண்டர்களை யும் ஓடி ஓடி பாதுகாத்தவர் நரசிம்மன். பெரியார் 1944–இல் வடநாட்டுப் பயணம் மேற்கொண்டபோதும், 1950–இல் பம்பாய் சென்றபோதும், 1954–இல் பர்மாவின் ரங்கூனில் நடைபெற்ற பௌத்த மாநாட்டுக்குச் சென்றபோதும் உடன் சென்றவர்களில் நரசிம்மனும் ஒருவர். 1945–இல் பெரியாரால் நிறுவப்பட்ட கருஞ்சட்டைப் படையின் தொண்டர் படைத்தளபதியாகச் செயல்பட்டார்.

‘பிரமணாள் கஃபே பெயர் அழிப்புப் போராட்டம்’, ‘சென்னை கபாலீஸ்வரர் கோயில் தமிழ் அர்ச்சனைப் போராட்டம்’, ‘குலக்கல்வி எதிர்ப்புப் போராட்டம்’, ‘இந்தி எதிர்ப்புப் போராட்டம்’, ‘ராமன் படம் எரிப்புப் போராட்டம்’, ‘பிள்ளையார் உருவ பொம்மை உடைப்புப் போராட்டம்’, ‘அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம்’ என பெரியார் முன்னெடுத்த முக்கிய போராட்டங்கள் அனைத்திலும் தவறாமல் பங்கெடுத்தவர். பெரியாருடன் வெளியூர்களுக்குப் பயணப்பட்ட அதேவேளையில், உள்ளூரிலும் ஏ.எம்.திருமூர்த்தி, ஏ.எம்.திருவேங்கடம், நஞ்சப்பன், கே.காளிமுத்து, காதர் மைதீன், முகமது அனிபா, ஆறுமுகம் என திராவிடர் கழகத் தோழர்கள் பலருடன் இணைந்து சுற்றுப்புற கிராமங்களில் பெரியாரின் கொள்கைகளை, ‘துண்டறிக்கைகள்’, ‘தெரு முனைக் கூட்டங்கள்’ வாயிலாகப் பரப்பி வந்தார். 1960–களுக்கு முன்பே ஆனைமலை சுற்றுவட்டாரத்தில் இரட்டைக்குவளை முறையை இல்லாமல் செய்தது இந்தப் படை.

அதுமட்டுமல்ல, 1949–ஆம் ஆண்டில் அன்னை மணியம்மையாரை பெரியார் பதிவுத் திருமணம் செய்தபோது, ஆனைமலைக்குச் சென்று, நரசிம்மன் வீட்டில்தான் 15 நாட்கள் தங்கியிருந்தார். பெரியாருடன் நரசிம்மன் கொண்டிருந்த நெருக்கத்தின் அடையாளத்திற்கு, இவற்றையெல்லாம் விட முக்கியச் சான்றாக இருப்பது, பெரியார் கூறிய ஆலோசனையை ஏற்று உள்ளூரில் சில புரட்சிகரமான நடவடிக்கைகளை மேற்கொண்டதுதான். குறிப்பாக, பெரியாரின் பெருங்கனவான ஊர்- சேரி பாகுபாட்டை ஒழிக்கத் துணிந்தவர் நரசிம்மன். ‘சமத்துவபுரம்’ என்ற புரட்சிகரமான திட்டத்தை முத்தமிழறிஞர் கலைஞர் வழங்குவதற்கு முன்பே, மாதிரி சமத்துவபுரத்தைக் கட்டியெழுப்பினார் நரசிம்மன். அது அவரின் பெயராலேயே ‘நரசிம்மன் நகர்’ என்றாகி, இன்றும் நிலைபெற்று இருக்கிறது.

**– தொடர்ச்சி அடுத்த இதழில் வெளிவரும்**

## களம் இறங்கிறது சென்னை இளைஞரணி!

சென்னை மாவட்ட இளைஞர் அணி சார்பாக “மனிதம் நமது அடையாளம்! ஜாதி நமக்கு அவமானம்! மடியட்டும் ஆணவப் படுகொலைகள் என்ற தலைப்பில் 10 நாட்கள் தொடர் தெருமுனைக் கூட்டங்கள் நடத்தவுள்ளது. செப்டம்பர் 1–ம் தேதி தொடங்கி, செப்டம்பர்–17 தேதி வரை தொடர் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தாம்பரம், பல்லாவரம், சைதாப்பேட்டை, தியாகராயர் நகர், எம்.ஜி.ஆர் நகர், அம்பத்தூர், அமைந்தகரை, வேளச்சேரி, தேனாம்பேட்டை ஆகிய இடங்களில் நடைபெற இருக்கிறது. 10 நாட்கள் தினமும் மாலை 5 மணியளவில் தெருமுனைக் கூடட்ங்கள் நடைபெறும்.

தெருமுனைக் கூட்டங்களில் கழகத் தோழர்கள், ஊடகவியலாளர்கள், வழக்கறிஞர்கள் பலர் கருத்துரை ஆற்ற உள்ளனர். செப்–17 நிறைவு பொதுக் கூட்டம் இராயப்பேட்டை பெரியார் படிப்பகம் அருகில் நடைபெறும்.

**இளைஞர்களே ஜாதியை தகர்த்தெறிவோம்!**
**சமத்துவ சமுதாயம் படைப்போம் வாரீர்!**

## சேலம் மாவட்ட இளைஞர் அணி கலந்துரையாடல் கூட்டம்!



16.08.2025 மாலை 6.00 மணிக்கு நங்கவள்ளியில் கிருஷ்ணன் (சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்) இல்லத்தில் நடைபெற்றது. கலந்துரையாடல் கூட்டத்திற்கு தங்கதுரை (சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்) தலைமை வகித்தார்.

கிருஷ்ணன் (சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்) முன்னிலை வகித்தார். கடவுள் மறுப்பு வாசகத்துடன் தொடங்கிய கலந்துரையடால் தொடங்கியது. கூட்டத்தில் எடுக்கபட்ட தீர்மானங்கள்:

1). மேச்சேரியில் 03.08.2025 அன்று சேலம் மாவட்ட இளைஞர் அணி சார்பில் நடைபெற்று முடிந்த "பெரியார் எனும் பெருநெருப்பு" கருத்தரங்கத்திற்கான வரவு, செலவு கணக்கு சார்பார்க்கப்பட்டது.

வரவு- 74,500,
செலவு- 70,160,
மீதி= 4,340

2). சேலம் மாவட்ட இளைஞர் அணி சார்பில் எதிர்வரும் 22.08.2025 வெள்ளி அன்று ஆணவப்படுகொலைகளுக்கு எதிராக தொடர் தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவது எனவும் இறுதியாக நிறைவுக் கூட்டம் ஓமலூரில் பொதுக் கூட்டமாக நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

சந்திரசேகரன் (நங்கவள்ளி நகரச் செயலாளர்), பிரபாகரன் (சேலம் மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர் ), சிவ சண்முகம் (சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்), கவியரசு (தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர்), மேச்சேரி சிவசபரி, நங்கவள்ளி கி.பிரபாகரன், செ.அறிவழகன், நிலவன், புகழேந்தி, பரத்ராஜ், பூபதிராஜா, கவின், பேரறிவாளன், கஸ்தூரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கி.பிரபாகரன் நங்கவள்ளி நன்றி உரையாற்றினார்.

## 77 வயது ‘பயனாளி’ ஐந்து மாத பயனாளியுடன்..



படம்: அறுவை சிகிச்சை செய்த 5 மாத பயனாளியுடன் 77 வயது பயனாளி

உடல் உறுப்பு கொடையில் தமிழ்நாடு தேசிய சராசரியை விட ஏழு மடங்கு கூடுதலாக இருக்கிறது என்று பொதுச் செயலாளர் விடுதலை ராசேந்திரன் எம்.ஜி.எம் மருத்துவமனை நடத்திய உறுப்பு கொடையாளர் பாராட்டு விழாவில் குறிப்பிட்டார். கடந்த ஆகஸ்ட் 23–ஆம் தேதி காலை 9 மணி அளவில் எம்.ஜி.எம் மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற விழாவில் உரையாற்ற மருத்துவமனை நிர்வாகம் விடுதலை ராசேந்திரனை அழைத்து இருந்தது.

மருத்துவமனையிலேயே மிக அதிக வயதில் (அதாவது 77 வயதில்) கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்ட இளைஞர் என்று, அறுவை சிகிச்சை செய்த குழுவின் தலைவர் மருத்துவர் டாக்டர் தியாகராஜன் விடுதலை இராசேந்திரனை அறிமுகப்படுத்தினார்.

மிகக்குறைந்த வயதுள்ள ஐந்து மாத குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு முன்பு இதே மருத்துவமனை வெற்றிகரமாக கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை நடத்தி சாதனை புரிந்தது. தாயும் குழந்தையும் நிகழ்ச்சிக்கு வந்திருந்தார்கள். விடுதலை ராசேந்திரன் தனது உரையில் குறிப்பிட்டதாவது: “எனக்கு உறுப்பை கொடையாக தந்த தோழர் விஜயகுமார் கனடாவில் இருக்கிறார், இங்கு வர இயலவில்லை. எந்த உறுப்பும் குருதிப் பிரிவை சார்ந்ததாக இருந்தால் போதும் மற்றவர்களுக்கு அதை பொருத்த முடியும். ஜாதியோ, மதமோ, பாலின வேறுபாடோ தடை இல்லை. இந்த கொடை “மனிதத்தை” வெளிப்படுத்துகிறது. மரணம் அடைந்த ஒருவரின் உறுப்புகள் ஏழு பேர் உயிரை காப்பாற்றுகின்றன. மரணத்தின் துயரம் மனதை அழுத்தும் போது பாசத்துக்கு உரியவர்களின் உறுப்புகள் மற்றவர்களிடம் உயிர்த் துடிப்போடு இயங்குகின்றன என்பதில் ஆறுதலும் அமைதியும் கிடைக்கிறது. உறுப்புகளை எடுக்கும் மருத்துவர்கள் உரிய மரியாதையுடனும் கவனத்துடனும் அதை கையாளுகிறார்கள். உருவச் சிதைவு வந்துவிடும் என்ற அச்சம் தேவையில்லை. இறுதிச்சடங்குகளுக்கு எதிரானது என்ற மத நம்பிக்கையும் இதில் குறுக்கிட வேண்டிய அவசியம் இல்லை.

ஸ்பெயின், குரேஷியா போன்ற நாடுகளில் உறுப்புக்கொடை குடியுரிமையுடன் இணைக்கப்பட்டுள்ளது. உடன்படாதவர்கள் மட்டுமே தங்களை தனியாக பதிவு செய்து கொள்ள முடியும். தமிழ்நாட்டில் மூளைச்சாவு அடைந்து உறுப்புக்கொடை வழங்குவோர்க்கு அரசு மரியாதையுடன் இறுதி நிகழ்வுகள் நடத்தப்படும் என்ற அரசின் திட்டத்தால் கொடை வழங்குபவர்களின் எண்ணிக்கை கூடுதலாகியுள்ளது.

ஓட்டுநர்கள் உரிமைக்காக விண்ணப்பிக்கும் படிவங்களில் உறுப்புக்கொடை பற்றிய ஒரு கேள்வி இருக்கிறது. போக்குவரத்து துறையினர் இது குறித்து விண்ணப்பதாரர்களிடம் கருத்து கேட்காமலேயே ‘இல்லை’ என்று பதிவு செய்து விடுகிறார்கள். இது குறித்து கண்டிப்பாக கருத்து கேட்க வேண்டும் என்று துறையினருக்கு அறிவுறுத்த வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்” என்றார் விடுதலை ராசேந்திரன்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : August 29, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran